[24th March 1964

கனம் சபாநாயகர் : கேள்வி 389 ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகள் நிறுவுதல்

*390 **கேள்வி—திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் சேலம் மாவட்டத்தில் புதிய கோழிப் பண்ணைகள் ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எங்கெங்கு ?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) There is no specific proposal at present for the establishment of new Poultry Farms in Salem district during 1964.

(அ) & (இ) 1964-ல் சேலம் மாவட்டத்தில் புதிய கோழிப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்காகக் குறிப்பான திட்டம் எதுவும் இப்போது இல்லை.

திரு. ம. கமலநாதன் : சேலம் மாவட்டத்தில் உள்ள ஹோசூர் கோழிப் பண்ணையை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : பஞ்சாயத்து யூனியன்கள் கோழிப் பண்ணையை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : வருஷா வருஷம் திட்டம் போட்டு சில யூனிட்டுகளை வைக்கிறோம். இப்போது கூட நான்கு யுனிட்டுகள் வைக்கவேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : நியூட்ரிஷன் புரோகிராம்படி கோழிப் பண்ணை வைக்க பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அவ்வாறு சேலம் மாவட்டத்தில் ஏதாவது வைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கூறுகிறேன்.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : நான் கேட்ட கேள்வி பஞ்சாயத்து யூனியன்கள் கோழிப் பண்ணைகள் நடத்த அனுமதி வழங்கப்படுமா என்பது. அதற்கு அமைச்சர் அவர்களுடைய பதில் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியன்களும் சில இடங்களில் கோழிப் பண்ணை வைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ, அவ்வளவு தூரம் உதவி செய்யும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.